**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 189/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W –1 |
| Name | : | துரைப்பாண்டி, வயது 59 |
| Father Name/Husband Name | : | பாலைய்யா |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கிளை மேலாளர் (தாய்கோ வங்கி ) |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of February 2023.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து தூத்துக்குடி தாய்கோ வங்கி கிளை மேலாளராக பணியில் உள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும். என்னுடன் தாய்கோ வங்கி, கோவில்பட்டி கிளையில் 2005–2008 வரை வேலை பார்த்தார்.
2. 14.11.2012 ஆம் தேதி கோவில்பட்டி கிளை, தாய்கோ வங்கியில் பணியில் இருந்தேன். எனக்கு முன்னர் மேற்படி வங்கியில் எதிரி 2010–2012 வரை கிளை மேலாளராக பணியில் இருந்தார்.
3. பொதுமக்களின் நகைகளை பாதுகாப்பதற்காகவும் கடனுக்காக அடமான வைத்த நகைகளையும் சரிபார்க்க செல்வராஜ், தணிக்கையாளர் என்பவர் திருநெல்வேலியில் வந்து கடந்த 20.10.2012 முதல் 31.10.2012 வரை தணிக்கை செய்தார்.
4. மேற்படி தணிக்கையின் போது 11 பாக்கெட்டுகள் நகைகள் காணவில்லை. அதன் எடை 607.900 மி.கி. அதன் மதிப்பு 18,23,700/– அதற்கு முழு பொறுப்பு ஏற்று ஆஜர் எதிரி 03.11.2012 ஆம் தேதி ரூ.20,00,000/– மும் 05.11.2012 ல் ரூ.5,00,000/– மும் 06.11.2012 ல் ரூ.5,00,000/– மும் மொத்தமாக ரூ.30,00,000/– எழுதி கொடுத்து அவரே வங்கியில் செலுத்தியுள்ளார்.
5. பின்னர் எங்கள் தலைமையில் இருந்து எங்களை புகார் கொடுக்க சொல்லிச் சொன்னார்கள். அதன் அடிப்படையில் நான் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. இந்த வழக்கு சம்பந்தமாக எத்தனை முறை வாய்தாவிற்கு வந்துள்ளீர்கள் என்றால் 4 முறை வந்துள்ளேன். புகார் கொடுக்க சொல்லி உங்கள் உயர்

அதிகாரி உங்களுக்கு எழுத்து பூர்வமாக கொடுத்துள்ளார்களா என்றால் 29.01.2013 ல் கொடுத்துள்ளார்கள். யார் கொடுத்தது என்றால் M.D கொடுத்தார்.

2. மேற்படி உத்தரவை போலிஸ் விசாரிக்கும் போது கொடுத்துள்ளீர்களா என்றால் கொடுத்துள்ளேன். உண்மையில் M.D எந்த உத்தரவும் கொடுக்கவில்லை என்றாலும் கொடுத்திருந்தால் போலிசார் விசாரணையின் போது அவர்களிடம் கொடுத்திருப்பீர்கள் என்றாலும் அவர்கள் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல நான் கொடுத்தேன்.
3. நீங்கள் கொடுத்த அ.சா.ஆ.1 புகாரானது கடந்த 20.05.2013 ஆம் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் உங்களது கையெழுத்து 20.05.2012 என்று உள்ளது என்றால் சரிதான். தவறுதலாக 2013 ற்கு பதிலாக 2012 என்று குறிப்பிட்டுவிட்டேன்.
4. உங்களது M.D 29.01.2013 ல் உத்தரவு கொடுத்துள்ளநிலையில் நீங்கள் 4 மாதங்கள் கழித்து 20.05.2013 ல் தான் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி 4 மாத காலதாமத்திற்கான காரணம் என்ன என்றால் தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பாளரிடமும் புகார் கொடுத்தேன் அவர் கோவில்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னார். கோவில்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்த போது அவர்கள் மீண்டும் தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்க சொன்னார்கள். மாறி மாறி அலைய வைத்ததால் தான் காலதாமம் ஏற்பட்டது.
5. நீங்கள் கொடுத்த புகாரானது பொய்யாக இருந்ததால் தான் போலிசார் உங்கள் புகாரை வாங்க மறுத்துவிட்டார்கள் என்றாலும போலிசார் உங்களை அலைக்கழித்ததாக சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல.
6. தணிக்கையாளர் வந்து உங்கள் கோவில்பட்டி கிளையில் வந்து தணிக்கை செய்யவதற்கு M.D உத்தரவிட்ட விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உத்தரவின் நகல் உங்கள் வங்கி கிளையில் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை போலிசார் விசாரணையின் போது கொடுத்தீர்களா என்றால் நான் கொடுக்கவில்லை.
7. தணிக்கையாளர் தணிக்கை செய்த போது வங்கியில் யார் யார் உடன் இருந்தது என்றால் யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் அப்போது இங்கு பணியில் இல்லை. எதன் அடிப்படையில் எதிரி மீது புகார் கொடுத்தீர்கள் என்றால் எதிரி தான் முழுபொறுப்பு என்று கடிதம் எழுதி கொடுத்ததால் அவர் மீது புகார் கொடுத்தேன். எதிரி எழுதி கொடுத்ததாக சொல்லும் கடிதத்தை போலிசார் விசாரணையின் போது கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். எதிரி நீங்கள் சொல்வது போன்று தான் தான் அதற்கு முழுபொறுப்பு என்று எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.
8. சம்பவ காலத்தில் உங்கள் வங்கியின் காசாளர் யார் என்றால் சகுந்தலா. சகுந்தலா என்பவர் மீது ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் எதிரி தான் தான் முழுபொறுப்பு என்று எழுதி கொடுத்ததால் அவர் மீது புகார் கொடுக்கவில்லை. சகுந்தலா இந்த வழக்கின் சாட்சி என்றால்சரிதான். அதே போன்று உங்கள் வங்கி நகை மதிப்பீட்டாளர் கணேசனும் சாட்சியாக

உள்ளார்எ ன்றால் சரிதான்.

9. மதிப்பீட்டாளர் கணேசனும் தான் தான் உங்களுடைய வங்கியில் நகைகள் இருப்பு குறைவுக்கு காரணம் என்று கடிதம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கடிதத்தை போலிசாரிடம் கொடுத்தீர்களா என்றால் கொடுத்துள்ளேன். மேற்படி கணேசன், சகுந்தலா ஆகியோர் உங்களுக்கு வேண்டிய நபர் என்பதால் அவர்கள் மீது புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.
10. உங்கள் வங்கியில் பொதுமக்கள் யாரும் தனது நகைகளை காணவில்லை என்று புகார் எதுவும் கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். அந்த புகார்களை போலிசார் விசாரணையின் போது அவர்களிடம் கொடுத்தீர்களா எ ன்றால் கொடுத்துள்ளேன். அப்படி எந்த ஒரு நபரும் புகார்கள் கொடுக்கவில்லை என்றாலும் உண்மையில் கொடுத்திருந்தால் அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பீர்கள் என்றால் சரியல்ல.
11. எதிரி ஒப்புக்கொண்டு பணத்தை திம்பி செலுத்திய விவரங்களை நீங்கள் கொடுத்த அ.சா.ஆ.1 புகாரில் சொல்லவில்லை என்றால் காவல்நிலையத்தில் புகாரை சுருக்கமாக கொடுக்க சொன்னதால் கொடுத்தேன்.
12. எதிரி தற்போதும் பணியில் தான் உள்ளார் என்றால் சரிதான். எதிரியும் நீங்க்ளும் ஒன்றாக வேலை செய்ததால், உங்களுக்கு எதிரி மீது தீராத கோபமும் பகை உணர்ச்சியும் பழைய பகையையும் மனத்தில் வைத்துக்கொண்டு எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து உண்மையான குற்றவாளிகளை தப்பிக்க வைத்துவிட்டு பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**சாட்சியின் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.